# தமிழ்நாடு தகவல் ஆணையம்

**எண்.2, தியாகராயர் சாலை, (ஆலையம்மன் கோயில் அருகில்), எல்டாம்ஸ் ரோடு சந்திப்பு, தேனாம்பேட்டை, சென்னை- 600 018. தொலைபேசி எண்: 24347590**

<u>ஆணை நாள் 02.11.2020</u>

**<u>முன்னிலை</u>**

## முனைவர் ரா.பிரதாப்குமார்

**மாநிலத் தகவல் ஆணையர்**

*****

**<u>வழக்கு எண். SA 945/B/20</u>**

திரு.P.மாரிமுத்து — மேல்முறையீட்டாளர்

எதிர்

பொதுத் தகவல் அலுவலர்/
தலைமையிடத்து துணை வட்டாட்சியர்,
சத்தியமங்கலம்,
ஈரோடு மாவட்டம். — பொது அதிகார அமைப்பு

**<u>ஆணை</u>**

COVID-19 காரணமாக தமிழ்நாடு அரசால், ஊரடங்கு (LOCK DOWN) பிறப்பிக்கப்பட்டுள்ள நிலையில் தமிழ்நாடு தகவல் ஆணையத்தில் வைத்து நேரடியாக விசாரணை மேற்கொள்ள இயலாததால், இன்று (02.11.2020) தொலைபேசி மூலம் தொடர்புகொண்டு வழக்கு விசாரணை மேற்கொள்ளப்பட்டது. இந்த விசாரணையில் மனுதாரர் திரு.P.மாரிமுத்து மற்றும் பொதுத் தகவல் அலுவலர், திரு.ஜெகன்நாதன், தலைமையிடத்து துணை வட்டாட்சியர், சத்தியமங்கலம், ஈரோடு மாவட்டம் அவர்கள் பங்கேற்றார்.

2. மனுதாரர், தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005 பிரிவு 6(1)-ன்கீழ் 12.11.2019 தேதியிட்ட மனுவில், சத்தியமங்கலம் வட்டாட்சியர் அலுவலகத்தார் 05.03.2019 தேதியிட்டு வழங்கப்பட்ட வாரிசு சான்றிதழில் பெயர் மாற்றம் கோரி 20.07.2019 தேதியிட்டு வட்டாட்சியர் அலுவலகத்தில் மனு செய்தது தொடர்பான தகவல்களைக் கோரி, பொதுத் தகவல் அலுவலர்/ தலைமையிடத்து துணை வட்டாட்சியர், வட்டாட்சியர் அலுவலகம், சத்தியமங்கலம் அவர்களுக்கு மனு செய்துள்ளார்.

3. 11.12.2019 தேதியிட்ட தகவல் திருப்தியளிக்காததால், மனுதாரர் தகவல் பெறும் உரிமைச் சட்டப்பிரிவு 19(1)ன் கீழ் 16.12.2019 தேதியிட்டு முதல் மேல்முறையீட்டு மனுவினை மேல்முறையீட்டு அலுவலர் அவர்களுக்கு விண்ணப்பித்தும் தகவல் கிடைக்கப்பெறாததால், மனுதாரர் 25.01.2020 தேதியிட்டு இரண்டாவது மேல்முறையீட்டு மனுவினை இவ்வாணையத்தில் தாக்கல் செய்துள்ளார். மனுதாரரின் இரண்டாம் மேல்முறையீட்டின் அடிப்படையில் தொலைபேசியின் வாயிலாக விசாரணை மேற்கொள்ளப்பட்டது.

4. இன்றைய விசாரணையின் போது பொதுத் தகவல் அலுவலர் தகவல் வழங்கும் பொருட்டு 1வாரகாலம் அவகாசம் வழங்கப்பட்டு, மனுதாரர் சட்டப்பிரிவு 6(1)-ன் கீழ் கோரிய தகவல்களை வழங்க ஆணையிடப்பட்டது.

5. மேற்படி ஆணைக்கிணங்க பொதுத் தகவல் அலுவலரால் தகவல் வழங்கப்பட்டுள்ளதாகவும், மேற்படி தகவலினை மனநிறைவுடன் ஏற்பளிப்பு செய்ததாகவும் மனுதாரர் தொலைபேசி வாயிலாக 11.11.2020 தேதியிட்டு தெரிவித்ததன் அடிப்படையில், இவ்வழக்கின் விசாரணை இத்துடன் முற்றாக்கம் செய்து இவ்வாணையம் உத்தரவிடுகிறது.

**ஒம்/-(ரா.பிரதாப்குமார்)**
**மாநிலத் தகவல் ஆணையர்**

**//ஆணையத்தின் ஆணைப்படி//**

**உதவிப் பதிவாளர்**

**வழக்கு எண். SA 945/B/20**
**பெறுநர்**
பொதுத் தகவல் அலுவலர்/
தலைமையிடத்து துணை வட்டாட்சியர்,
சத்தியமங்கலம்,
ஈரோடு மாவட்டம்.

திரு.P.மாரிமுத்து,
56, தாகூர் வீதி,
புஞ்சை புளியம்பட்டி,
ஈரோடு மாவட்டம் - 638 459.

Copy to: File
MP/PA-12.11.20